

திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட 500 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொங்கல் பரிசு மற்றும் நலத்திட்ட வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு உணவு பரிமாறி உணவு அருந்தினார். உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் தாமோந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், ஹரி கிருஷ்ணன், டி.மோதிலால், பிரகாஷ் ஞான ஒளி, முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் வார்டு கவுன்சிலர்கள் தூய்மை பணியாளர்கள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம்,திரு.வி.க நகர் வடக்கு பகுதி,71.அ வட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (05.01.2026) சென்னை, பெரம்பூர், ஸ்ரீ பூலோக மாத்தம்மன் ஆலயத்தில் நடைபெற்று வரும் திருப்பணிகளை ஆய்வு செய்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியாராஜன், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், பகுதி செயலாளர் செ.தமிழ்வேந்தன், வட்ட செயலாளர் மா.ருத்ரமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

### சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில் விவகாரம்:

# விஷமிகளுக்கு ஆதரவுக் குரல் கொடுப்பதா?

## பா.ஜ.க.வுக்கு முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன் கண்டனம்!

நாகர்கோவில், ஜன.6–

”சுசீந்திரம் தாணுமாலயன் கோவில் விவகாரத்தில் விஷமிகளுக்கு பா.ஜ.க. ஆதரவு குரல் கொடுப்பதா?” என்று முன்னாள் அமைச்சர் எஸ்.சுரேஷ் ராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ்ராஜன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

சுசீந்திரம் தாணுமலையார் சுவாமி திருக்கோவிலில் 2.1.2026 அன்று நடைபெற்ற மார்கழி தேரோட்டம் நிகழ்வில் பக்தர்களின் மனதை புண்படுத்தும் வகையில் விரும்பத்தகாத கோஷங்களை எழுப்பி கலவரத்தை ஏற்படுத்த நினைத்த சில விஷமிகளின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது .

மக்களின் மத நம்பிக்கைக்கு இடையூறு ஏற்படாமல் மக்களை வழிபட விடுவது தான் அரசின் கடமை.ஆனால் அதை தடுக்கும் வகையில் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முழு நோக்கத்தோடு செயல்பட்டவர்களை தடுத்து நிறுத்திய இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களை பாராட்ட மனம் இல்லாதவர்கள் முதலில் அமைதி காப்பதே அவர்களுக்கான அறம்.

ஆனால் அதை விட்டு விட்டு அறிக்கை என்ற பெயரில் பக்தர்கள் புண்படும் வகையில் நடந்து கொண்டதாக திருத்தி அமைச்சர் அவர்கள் பதவி விலக வேண்டும்,மன்னிப்பு கேட்க வேண்டும் என்று விஷமிகளுக்கு ஆதரவு குரல் கொடுக்கும் மதிப்பிற்குரிய பொன்.ராதாகிருஷ்ணன், எம்.ஆர். காந்தி, தளவாய் சுந்தரம் போன்றோர்களுக்கு என்னுடைய கேள்வி என்னவென்றால்,

சரியான நேரத்தில் தனது குடும்பத்துடன் கலந்துகொண்ட அமைச்சர் அவர்கள்,சரியான நேரத்தில் தேரானது இயக்கப்பட்டதை அங்கு கூடி இருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண் கூடாக பார்த்த நிகழ்வை,அதில் கலந்துகொள்ளாத உங்களை போன்றோர்கள் இப்படி பொறுப்புணர்ச்சி இல்லாமல் பேசுவது அழகு அல்ல.

ஒரு அமைச்சர் தனது குடும்பத்துடன் வந்து சாமி தரிசனம் செய்ய வந்தவரை அநாகரிகமான வார்த்தைகளால் வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தி,பக்தர்கள் மனம் புண்படும் வகையில் நடந்த விஷமிகள் செய்த செயலை சரி என்று ஏற்றுக்கொள்ள சொல்கிறீர்களா?

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இடையூறு இல்லாமல் வழிபட்டு அமைதியுடன் கடந்து சென்ற இடத்தில், சில விஷமிகளின் விரும்பத்தகாத செயலால் பக்தர்கள் மனம் புண்படும் வகையில் கலவரம் ஏற்பட்டு விடக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் செயல்பட்ட அமைச்சர் அவர்களின் செயல்பாடு எப்படி தவறானதாக கொள்ளப்படும்.

பக்தர்கள் தங்களின் கடவுளின் பெயரில் கோஷத்தை எழுப்புவது அவர்களின் தனிப்பட்ட உரிமை. அதற்கு யாரும் இங்கு தடை ஏற்படுத்தவில்லை. ஆனால் பக்தர்கள் என்ற பெயரில் போலி வேஷம் தரித்த சில விஷம கும்பல்கள் நாட்டில் கொலை குற்றவாளிகளாக பார்க்கப்பட்ட சாவர்க்கர் போன்றோர்களின் பெயரை உச்சரித்து கோஷம் போட என்ன தேவை இருந்தது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திராவிட மாடல் ஆட்சியில் கோவில்கள் புனரமைப்பு செய்யப்படுகிறது,கும்பாபிஷேகம் நடந்த படுகிறது.மேலும் தமிழகம் முழுவதும் உள்ள கோயில் அனைத்தும் பாராமரிக்க ப்படுகிறது.இதனால் மக்கள் மகிழ்ச்சி நிறைந்திருக்கிறார்கள்.

குறிப்பாக 50 ஆண்டு கால வரலாற்றில் இதுவரையிலும் இல்லாத அளவிற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து கோவில்களும் புனரமைக்கப்பட்டு கம்பீரமாக காட்சி அளிக்கிறது.இதனை பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் பக்தியையும்,பக்தர்களையும் மதிக்காமல் பக்தி என்ற பெயரில் கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கி றார்கள்.அதனை திராவிட மாடல் ஆட்சி வேடிக்கை பார்த்து கொண்டு இருக்காது.

கடைசியாக மக்களின் மத நம்பிக்கையையும்,மனிதாபிமானத்தையும் காக்கும் திமுக அரசு எப்போதும் மதவாதத்தை அனுமதிக்காது என்பதை புரிந்துக்கொண்டு செயல்படுங்கள் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு என்.சுரேஷ்ராஜன் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.



”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்னும் தலைப்பில் வாக்குச்சாவடி வாரியாக தெருமுனை கூட்டம் மற்றும் வீடு வீடாக சென்று கழக சாதனை பிரசுரம் வழங்கும் நிகழ்ச்சி பகுதி கழக செயலாளரும் மண்டல குழு தலைவருமான எஸ். மதன்மோகன் எம்.சி. தலைமையில் பாகம் 21 சாமி நாயக்கன் தெரு பாகம் 26 குருவப்பா தெரு, பாகம் 30 சிங்கன்ன தெரு பாகம் 31 டாக்டர் கோவிந்தன் தெரு தாவுத் தெரு உள்ளிட்ட தெருக்கள் பாகம் 32 ரிச்சி தெரு ஹவுசிங் போர்டு ஆதிகேசவ தெரு உள்ளிட்ட தெருக்கள் தெரு ஆகிய பாகங்களில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அந்தந்த பாகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள்(BLA2) பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள்(BDA) பாக இளைஞரணியினர் (BYD) பாக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” - இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜன.6-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 06.01.2026, செவ்வாய்கிழமை அன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.



**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 70 , பாகம்: 220. இடம்: 13, கம்பர் தெரு, ரமணாநகர், பெரம்பூர், சென்னை11.

மாலை: 4.30 மணி: வட்டம் 70 , பாகம்: 221. இடம்: 30, நீலந்தோட்டம், 2வது தெரு, பெரம்பூர், சென்னை11.

மாலை: 5.00 மணி: வட்டம் 70 , பாகம்: 222. இடம்: 13, நீலந்தோட்டம், 2வது தெரு, பெருமாள் கோயில் அருகில்

மாலை: 5.30 மணி: வட்டம் 70, பாகம்: 223. இடம்: 11/4, திருநாவுக்கரசு தெரு, பெரம்பூர், சென்னை11.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 66, பாகம்: 78. இடம்: பாலகுமாரன் நகர், கொளத்தூர், சென்னை99.

மாலை: 4.30 மணி: வட்டம் 66, பாகம்: 90. இடம்: மேரிஎலன் தெரு, பெரவலூர், சென்னை82.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 6.30 மணி: வட்டம் 56அ, பாகம்: 90, 91, 95. இடம்: எண்.1/10, கார்ப்பரேஷன் காலனி, சாலை விநாயகர் கோயில் தெரு, மண்ணடி, சென்னை1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 57, பாகம்: 142, 143, 144, 149, 138, 139, 140, 141. இடம்: இருளப்பன் தெரு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 77அ , பாகம்: 52, 53. 54.

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 97அ , பாகம்: 161, 180, 181. இடம்: பழனி ஆண்டவர் கோயில் தெரு, ஆகாஷ் ஐஸ்வர்யம் (101 முதல் 283), சபாபதி தெரு, குடிசை பகுதி, சபாபதி முதல் சந்து, துரைசாமி தெரு, சிவம் பிளாட்.

மாலை: 4.30 மணி: வட்டம் 96 , பாகம்: 140, 141 இடம்: டங்கன் சாலை 1 - 16 தெருக்கள் வரை, கொன்னூர் நெடுஞ்சாலை சந்து.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 5.00 மணி: வட்டம் 104அ , பாகம்: 125, 130, 135. இடம்: ஒய் பிளாக் 3வது தெரு, டி.வி.நகர், காந்தி மெயின் ரோடு, என்.வி.என்.நகர் 8வது தெரு.

மாலை: 6.00 மணி: வட்டம் 95 , பாகம்: 22, 23, 71. இடம்: வெள்ளாளத் தெரு, திருவள்ளுவர் தெரு, மூர்த்தி நகர்.

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம்: 335. இடம்: 1 வது பிளாக் 5 வது தெரு முகப்பேர் கிழக்கு

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 84 , பாகம்: 184. இடம்: பெரியார் நகர், கொரட்டூர், சென்னை53

மாலை: 5.30 மணி: வட்டம் 84 , பாகம்: 187. இடம்: குமாரசாமி நகர், கொரட்டூர், சென்னை80.

மாலை: 6.00 மணி: வட்டம் 83 , பாகம்: 62. இடம்: பாலாஜி நகர், 3வது தெரு, கொரட்டூர், சென்னை79

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 320 வது நாள்!

## அம்பத்தூர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜன.6-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 320 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (05.01.2026), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 81, தெற்கு பூங்கா தெரு, வெங்கடாபுரம், 2) வட்டம் 80, புதூர் தாங்கல் மெயின் ரோடு, சேரன் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/ தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. மாயவன்
### சனவரி 6 (1998)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

கடலூர் மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, மக்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தி.மு.க. நெசவாளர் அணி திருச்சி தெற்கு மாவட்டம்,

# திருச்சி கிழக்கு மாநகர அமைப்பாளர் நியமனம்!


### தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

திருச்சி தெற்கு மாவட்டம், திருச்சி கிழக்கு மாநகர நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.பெஞ்சமின் அவர்களுக்குப் பதிலாக **கே.விஜயகோபால்** (121/ஏ, கீழபடையாச்சி தெரு, பாலக்கரை, திருச்சி1) அவர்கள் திருச்சி கிழக்கு மாநகர நெசவாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

| | |
|---|---|
| **“அண்ணா அறிவாலயம்”** | **நன்னியூர் இராஜேந்திரன்** |
| சென்னை / 18. | தலைவர் |
| நாள் : 5.1.2026 | தி.மு.க. நெசவாளர் அணி |

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு. தம்பையா
### சனவரி 6 (2023)



கழகம் தொடங்கிய நாள் முதலே உறுப்பினராகி, கழகத்தின் சார்பில் மன்றம், படிப்பகம் தொடங்கி கழகக் கொள்கைகளை தனது பகுதியில் பரப்பியதோடு, அதில் இரவு பாடசாலை நடத்தியவர்.

பகுதி பிரதிநிதி, இரு முறை வட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்ததோடு, முத்தமிழறிஞர் கலைஞர் சைதை தொகுதியில் போட்டியிட்டபோது, அவரது வெற்றிக்கு பாடுபட்டவர்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்கு பின்னர் சைதை தொகுதியில் முதன்முதலாக சிலை வைத்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.